

FREE EDITION

September - 2018

# ஜோதி

# Jothi
## Spiritual Newsletter

ஜோதி 12 : சுடர் 07 -139

ஆன்மிகச் செய்திச்சுடர்

**மூல மந்திரம்**

ஓம் சக்தியே பராசக்தியே!
ஓம் சக்தியே ஆதி பராசக்தியே!
ஓம் சக்தியே மருவூர் அரசியே!
ஓம் சக்தியே ஓம் விநாயகா!
ஓம் சக்தியே ஓம் காமாட்சியே!
ஓம் சக்தியே ஓம் பங்காரு காமாட்சியே!

**

**ஆன்மிககுரு அருள்திரு அம்மா, திருமதி இலட்சுமி பங்காரு அடிகளார் அவர்களின்**

## 50ஆவது அம்மாவின் திருமண நாள்

**04.09.2018**



**திருமண நிறைவு நன்னாளில் நல்லாசிகளை வேண்டும்.**
**–செவ்வாடை சக்திகள்**

# ஒரு வருடம் ஒரு நாளில் சொன்னபடி உயர்வு தந்த அன்னை

**சக்தி சிதம்பரம்** - குவாலியூர்

“என் பணியை நீ செய் உன் பணியை நான் முடிப்பேன்” என்று அன்னை அருள்வாக்கில் அருளியிருப்பதாகச் சக்தி ஒளியில் படித்ததுண்டு கேட்டதுண்டு. என் நண்பர் ஒருவர் வாழ்வில் அன்னை காட்டிய கருணை அந்த அருள்வாக்கின் ஆழமான பொருளை நான் உணரும்படிச் செய்தது.

### வேலையில்லாத பட்டதாரி:

என் நண்பர் ஒருவர் படித்துப் பட்டம் பெற்று வேலை தேடுகின்ற முயற்சியில் பலமுறை சென்னைக்கு நேர்முகத் தேர்விற்காக (Interview) அலைந்து திரிந்தார். பேட்டிகள் பலவற்றிலும் கலந்து கொண்டு அவர் கண்டறிந்த அனுபவ உண்மை ஒன்றே ஒன்றுதான்.. அது என்ன? பணம் கொடுத்தால் தான் வேலை கிடைக்கும். விலை கொடுத்து வேலை பெறவேண்டிய நிலைமை உருவாகியிருப்பதை அறிந்த நண்பர் விரக்தியடைந்தார்.

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

### உலகமெங்கும் சர்க்கரை வியாதி

**சுக்கு, மிளகு, திப்பிலி உபயோகித்த பழமையான காலம் உண்டு. சுக்கு காப்பியில் வெல்லம் போட்டுச் சாப்பிட்டபோதே வெல்லத்தில் இனிப்பு இருந்தது. உடலில் இனிப்புச் சேர்ந்தது. ஆனால் நோய் சேரவில்லை.**
**ஆனால், இனிப்பு என்றால் சர்க்கரை என்று வந்த பிறகு, கெமிக்கல் வந்தது. அதிலுள்ள இனிப்புக் கெமிக்கல் வந்த பிறகுதான் உடலுக்குள் அது ஊறி ஊறி, இன்று உலகத்தில் எங்கு பார்த்தாலும் சர்க்கரை வியாதியாக மாறுகிறது.”**
**அன்னையின் அருள்வாக்கு**

## ஆன்மிகத்தில் முன்னேற முடியாது

**“பணம்! பதவி! புகழ்! இவற்றை விரும்புகிறவன், தாய் தந்தையரை மதிக்காதவன், ஆன்மிகத்தில் முன்னேற முடியாது. பணம், பதவி, புதகழ் என்பன உன்னை அழிவுப் பாதைக்குக் கொண்டு போகும்.”**

- **அன்னையின் அருள்வாக்கு**

அன்னையின் அருள்வாக்கு:

**“ஒருவனுடைய படிப்பு, நடிப்பு, உயர்வு, தாழ்வு அனைத்திற்கும் ஒரு காரணம் உண்டு. காரணம் இல்லாமல் காரியம் இல்லை.”**

## “ஜோதி” - ஆன்மிக செய்திச்சுடர்

ஜோதியில் வெளிவரும் ஆக்கங்கள் மூலக்கருப் பொருளான ஆன்மிககுரு அருள்திரு அம்மா உலகுக்குத் தந்த இலகுவழி ஆன்மிகம், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அறநிலையின் வெளியீடான ‘சக்தி ஒளி’ மற்றும் ஆலயம் சார்ந்த ஆக்கங்கள், சக்திகளின் அனுபவங்கள் என பல்வேறு ஆக்கங்களிலிருந்து பெறப்பட்டவையாகும்.

மேற்படி ஆக்கங்கள் தொகுக்கப்பட்டு இலகு வழியாக மக்களிடம் சென்று அடையும் பொருட்டும், அம்மாவின் ஆன்மிகத்தை மக்களிடையே பிரச்சாரம் செய்யும் வகையிலும் சிறு தொண்டாகவே மேற்கொள்ளப் படுகிறது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

முகநூல்(Facebook) சமூக வலைய இணையத்தளத்தினுடாக ”ஜோதி” ஆன்மிகச் செய்திச்சுடர் மாத இதழை தரவிறக்கம் செய்யலாம்.

**Search by: “Jothi Sudar”**

## செய்திச்சுடரில்…


ஒரு வருடம் ஒரு நாளில் சொன்னபடி உயர்வு தந்த அன்னை
Page: 1 – 3

ஜோதியைக் கண்டதால் மறுபிறவியில்லை
Page: 6 - 7

UPCOMING EVENTS
Melbourne: 13, 14
Sydney: 9, 12

திருமதி அம்மா பதில்கள்
பக்கம்: 5

நான் கண்ட அம்மா
பக்கம்: 8, 14

Divine Miracles
Page:15

சித்தர்பீட விழாக்கள்
பக்கம்: 16

ஆன்மிக நாட்குறிப்பு
பக்கம்: 16


# ஒரு வருடம் ஒரு நாளில் . . .

(1ஆம் பக்க தொடர்ச்சி)

சென்னையில் தாம் தங்கியிருந்த உறவினர் வீட்டிற்கு வந்து சேர்ந்தார். மீண்டும் எங்காவது வேலைக்கு முயற்சி செய்துவிட்டுத் தம் சொந்த ஊருக்குத் திரும்பிவிட வேண்டியதுதான் என்று தீர்மானம் செய்து கொண்டார். ஊரில் சொந்தமாக இருக்கின்ற நிலத்தையும், தோட்டத்தையும் கவனித்துக்கொண்டாலே போதும். இனிமேல் பெரிய பெரிய பட்டப்படிப்பு மாத்திரம் இருந்துவிட்டால் போதாது. பணமும் இருந்தால்தான் வேலையே கிடைக்கும் என்று தெரிந்து கொண்டார்.

## மேல்மருவத்தூர் பற்றிக் கேள்விப்பட்டது:

அடுத்தநாள் அவர் ஊருக்குச் செல்லத் தயாராக இருந்தபோது தம் உறவினர்கள் மூலமாக மேல்மருவத்தூர் ஆலயத்தின் சிறப்பையும் அன்னை ஆதிபராசக்தியின் அருள்பிரவாகத்தையும் கேள்விப்பட்டு மேல்மருவத்தூர் சென்று அன்னையைத் தரிசித்துவிட்டுப் பின் ஊருக்குச் செல்லலாம் என்று எண்ணிக்கொண்டார். ஊர் செல்லும் வழியின் இடையிலேயே மேல்மருவத்தூர் இருந்ததால் இறங்கிக் கொண்டார்.

அன்னையின் ஆலயத்தை வலம் வந்தார். அன்னையைத் தரிசித்த மகிழ்ச்சியால் நெஞ்சில் இருந்த பாரம் குறைந்து, அமைதி ஏற்பட்டது போல உணர்ந்தார். ஆலயத்தை விட்டு அகலவே அவருக்கு மனமில்லை. அன்று தங்கி மறுநாள் புறப்பட இருந்த அவருக்கு அருள்வாக்கு கேட்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

## அன்னை கூறிய அருள்வாக்கு:

அன்னையின் முன்பு அமர்ந்து தம் குறைகளைக் கூறும் முன்பே, “வேலை செய்து பணம் பெறுகிற நிலைமை போய் பணம் கொடுத்து வேலை பெறும் நிலை வந்துவிட்டதே என்று மனம் தளர்ந்த நிலையில் வந்திருக்கிறாய் மகனே!” நீ யாரிடமும் வேலை தேடிக்கொள்ளும் அவசியம் இல்லை மகனே!”

“தக்க தருணம் வரும்போது நானே உன்னை நல்ல வேலையில் அமர்த்துவேன் மகனே! “நீ இருக்கும் இடத்தில் வார வழிபாட்டு மன்றம் அமைத்து வழிபாடு செய்து வா மகனே!” என உத்தரவு கொடுத்து அனுப்பி வைத்தாள். வெளியே வந்த அவருக்கு, அப்போதே வேலை கிடைத்துவிட்டது போன்ற வேலை கிடைத்துவிட்டது போன்ற ஓர் உணர்வும், இனம்புரியாத மகிழ்ச்சியையும் மனத்தில் நிறைந்தன. ஊரை நோக்கிப்புறப்பட்டார்.

## சொந்த கிராமத்தில் வார வழிபாட்டு மன்றம்:

அவருடைய ஊர் சிறிய கிராமம் தான். கிராமத்திலுள்ள அனைவரிடமும் அன்னையின் ஆலயத்தின் சிறப்பைக் கூறி மன்றம் ஏற்படுத்த முயன்றார். எதிர்பார்த்த வரவேற்பு ஊரில் கிடைக்கவில்லை. ஆயினும் அந்த மாவட்டத்தில் ஏற்பட்ட முதல் மன்றம் என்கிற பெருமை அதற்கு உண்டு.

மாதங்கள் பல ஓடி விட்டன. மன்றம் சிறிது சிறிதாக வளர்ச்சி பெற்று வந்தது. இவருக்கு வேலைக்கான வாய்ப்புகள் எதுவும் தெரியவில்லை. மீண்டும் அன்னையிடம் கேட்கலாமா என்றும் எண்ணியதுண்டு. அவருடைய பயிர்த் தொழில் செழிப்பாக வளர்ந்து கொண்டு வந்த நேரமாதலால் ஆலயம் செல்வதைத் தள்ளிப் போட வேண்டியதாயிற்று.

(தொடர்ச்சி…3ஆம் பக்கம்)

# ஒரு வருடம் ஒரு நாளில் . . .

(2ஆம் பக்க தொடர்ச்சி)

## ஒரு விபத்து:

மாதங்கள் பல கழிந்தன. ஒரு முறை தமது கிராமத்தை அடுத்த ஊரில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த உறவினரைப் பார்த்து நலம் விசாரித்து வரப் புறப்பட்டார். மாலை நேரம்! அலுவலகங்கள் பள்ளிக்கூடங்கள் அனைத்தும் முடிந்து ஆட்களும் வாகனங்களும் போவதும் வருவதுமாக இருந்தன. போக்குவரவு நெரிசல் அதிகமாக இருந்த நேரம். சாலையோரமாக அவர் நடந்து செல்கையில், எதிர்பாராதவாறு பள்ளிக்கூடத்திலிருந்து நெடுஞ்சாலைக்கு ஓடிவந்த ஒரு சிறுவன் "ஆட்டோ ரிக்ஷா" ஒன்றினால் மோதப்பட்டு சாலையின் மறுபக்கம் தூக்கியெறியப்பட்டான். அதைக்கண்ட மக்கள் பலமாகக் கூச்சல் போடவே, ஆட்டோ ரிக்ஷாகாரன் வேகமாக வண்டியை செலுத்திக்கொண்டு தப்பி ஓடி விட்டான்.

தலையில் பலத்த காயமேற்பட்டு இரத்த வெள்ளத்தில் கிடந்த சிறுவன் கதறிக் கொண்டிருந்தான். சுற்றியிருந்த மக்கள் கூட்டம் வேடிக்கை பார்த்ததே தவிர உதவி செய்ய முன்வரவில்லை. அப்போதுதான் அவர், வேகமாக சென்ற ஆட்டோவின் எண்ணைக் குறித்து வைத்துக்கொண்டு, அருகிலிருந்த காவல் நிலையத்தில் செய்தி கூறிவிட்டு, அடிபட்ட சிறுவனுக்கு முதலுதவி செய்ததும் வேறொரு ஆட்டோவைப் பிடித்து சிறுவனை ஏற்றிக் கொண்டு மருத்துவமனைக்குச் சென்றார். உடனடியாக மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது. அவரது சேவையை மருத்துவரே பாராட்டினார். இது நடந்து பல மாதங்களாயின. இன்னும் அவருக்கு வேலை கிட்டிய பாடில்லை. இருப்பினும் அன்னை மீது பாரத்தைப் போட்டுவிட்டுத் தன் விவசாய பணியையும், மன்றப் பணியையும் சிறப்பாகச் செய்து வந்தார். அன்னையிடம் அருள்வாக்கு கேட்டு ஓராண்டு முடியப் போகிறதே! இன்னும் வேலை கிடைத்த பாடில்லையே, சரி! மீண்டும் ஒரு முறை அருள்வாக்கு கேட்போம் எனத் திட்டமிட்டுக் கொண்டு மேல்மருவத்தூர் புறப்பட்டார்.

## அன்னை கூறியது:

அருள்வாக்கில் அன்னை 'மகனே! உனக்கு ஒரு வருடம் ஒரு நாள் போதாத காலம் உனக்குத் தகுந்த நேரத்தில் நான் உதவி செய்வேன் கவலை வேண்டாம். அன்றொரு நாள் விபத்தில் மாட்டிக் கொண்ட அந்தச் சிறுவனுக்கு வேண்டிய நேரத்தில் எவ்வாறு உதவி செய்தாயோ அதுபோல தகுந்த தருணத்தில் நான் உனக்கு உதவி செய்யத் தவறமாட்டேன்'. "எல்லமே நேரம் காலத்திற்கு உட்பட்டதுதான்! ஏராளமான துனபம் தரும் கொடிய நிகழ்ச்சிகள் கூட சில நாட்கள் கழிந்தவுடன் தன் அசுர பலத்தை இழந்து விடுவதில்லையா? உனக்கென்று வேளை வரும்போது வேலையும் வந்து சேருமடா மகனே!".

"தாய் அவசரப்படுகிறாளே என்பதற்காகப் பத்து மாதங்கள் கருவில் வளர வேண்டிய குழந்தையை ஐந்து மாதத்தில் ஜனிக்க வைத்தால் அக்குழந்தையின் வளர்ச்சி, உருவம் எப்படியிருக்கும் மகனே?" "உரிய நேரம் வரும்போது வேலை உன்னைத் தேடிவரும்! உத்தரவு மகனே!" என்று கூறி முடித்தாள். அருள்வாக்கு கேட்டு வெளியே வந்த அந்த நண்பர், இப்போது நமக்கு வேலை கிடைக்கவில்லையே என்ற கவலை பெரிதாகப்படவில்லை என்றோ, எப்போதோ ஒரு நாள் விபத்தில் அகப்பட்ட சிறுவனுக்கு நாம் செய்த உதவியை நாமே மறந்து நாட்கள் பலவாகிவிட்டன. ஆனாலும் அதனைத் தெரிந்து வைத்துக் கொண்டு இப்போது நினைவு கூறுகிறாளே என்பதை எண்ணியெண்ணி அவர் உடல் புல்லரித்தது. கண்கள் குளமாயின.

இவற்றையெல்லாம் தெரிந்து வைத்திருக்கும் அன்னைக்கு, நமக்கு வேலை கிடைக்கவில்லை என்பது மட்டும் தெரியாதா என்ன? உலக மாதாவிடம் போய் வேலை வேண்டும் என்று குறைபட்டுக் கொண்டோமே! "வேண்டத்தக்கது அறிவாய் போற்றி ஓம்" என்ற மந்திரம் பொய்க்காது என்கிற நம்பிக்கையோடு அன்னையை நோக்கிக் கைகூப்பினார்.

**"அன்னையை காளி அணிமருவூர் வாழ்பவளே உன்னையாம் எல்லாம் இன்றிரந்து கேட்ப வெலாம் பொன்னல்ல! பொருளல்ல! பெரும் போகப் பேறல்ல! பொன்றாத நின்னன்பும்! வுற்ற நின்னருளும் குன்றாத நல்லறத்தில் தோய்ந்த வொரு நன்னெஞ்சும் கும்பிட்டு நின்தாளில் தோய்கின்ற பக்தியும் என்றென்றும் தந்துய்ப்பாய்"**
என்று அன்னையை நோக்கி வேண்டினாரே தவிர, தனக்கு வேலை வேண்டுமென வேண்டிக் கொள்ளவே மனம் வரவில்லை.

இனிய நினைவுகளோடு தம் இல்லம் வந்து சேர்ந்த அவருக்கு ஓர் ஆங்கிலப் பள்ளியில் ஆசிரியர் பணி சேர்வதற்கான உத்தரவு வந்திருப்பதைக் கண்டார். அன்றொரு சரியாக அன்னையிடம் முதன் முதலாக அருள்வாக்கு கேட்ட நாள்முதல் ஒரு வருடம் ஒரு நாள் முடிவதை எண்ணிப் பார்த்தார். 'ஒரு வருடம் ஒரு நாள் உனக்குப் போதாத காலமடா மகனே!" என்றல்லவோ அன்னை கூறியிருந்த அவள் கணக்கு சரிதான்! தான் அவசரப்பட்டு விட்டேன் என்று உணர்ந்தார். ஆனாலும் என்ன? இவ்வளவு நாட்களும் இந்த போதாத காலத்தில் அவர் அன்னையின் பாதுகாப்பு வளையத்தினுள் தானே இருக்கிறார். இப்போது ஆசிரியர் பணியைச் சிறப்பாகச் செய்து வருகிறார். சக்திகளே! ஆதிபராசக்தி வழிபாட்டு மன்றம் என்ற வேலையே நம் பொறுப்பில் அம்மா கொடுத்திருக்கிறாள். அதன் நம்மை வைத்து உலக நலம் பெற வழிகாட்டியிருக்கிறாள். ஓம் சக்தி அம்மாவே சரணம் அம்மா!

ஓம் சக்தி!

# வால் நட்சத்திரம் ~ ஆபத்திலிருந்து காப்பாற்றியது

1997ஆம் ஆண்டு மார்ச் மாதம் பத்திரிகைகள் பரபரப்பான செய்தி ஒன்றை வெளியிட்டன. விண்ணிலிருந்து ஹாலி என்ற வால் நட்சத்திரம் விழ இருப்பதாகவும், அதனால் உலகில் சில பயங்கரமான விளைவுகள் ஏற்படும் என்றும் யூகங்கள் வெளியிட்டன.

அந்த ஆண்டு சித்திரை பௌர்ணமி விழாவையொட்டி, வால் நட்சத்திரத்தின் வீழ்ச்சியால் பாதிப்பு எதுவும் வராமலிருக்கும் வகையில் புதிய சக்கரம் ஒன்றையும், யாக குண்டம் ஒன்றையும் அமைத்து அன்னை வேள்வி செய்யுமாறு ஓரளவு சொல்லிக் கொடுத்தாள். அவ்வாறு செய்யப்பட்டதால், வால் நட்சத்திரத்தினால் எந்தப் பாதிப்பும் இல்லாமல் உலகம் நிம்மதிப் பெருமூச்சு விட்டது.

ஹாலி வால் நட்சத்திரம் 1997ஆம் ஆண்டு மார்ச் 24 முதல் ஏப்ரல் 12 வரை காட்சி அளித்தது. இவ்வால் நட்சத்திரத்தைப் பூமியிலிருந்து வெற்றுக் கண்ணாலேயே பார்க்க முடிந்தது.

இத்தகைய ஹாலி வால் நட்சத்திரம் விழுகிற சமயங்களில் உலகில் என்னென்ன ஆபத்துக்கள் ஏற்படும் என்பது பற்றி 8.4.86 தினமணி நாளிதழ் குறிப்பிட்டிருந்தது.

லோரன் கோல்மேன் என்கிற தற்கொலை இயலின் நிபுணர் அமெரிக்காவில் சமர்ப்பித்த கட்டுரையின் சாரம்…

விமான விபத்து, இயற்கையின் சீற்றம் மற்றும் தற்கொலைகள் ஆகியவை காரணமாக ஆயிரக்கணக்காளோர் உலகின் பல பகுதிகளில் கடந்த ஆண்டுகளில் உயிரிழந்தனர்.

இவற்றுக்கெல்லாம் காரணம் ஹாலிதான் என்று அதன்மீது பழியைப்போட முடியாது என்றாலும், உலகிற்கு அருகில் இதுபோன்ற வால் நட்சத்திரங்கள் வரும்போத மக்கள் அழிவதும், வன்முறை வெடிப்பதும், அரசுகள் வீழ்வதும் நடக்கத்தான் செய்கிறது என்று ஆண்டு வரிசையாக நிகழ்ச்சிகளைக் கொடுத்து சான்றுகள் தருகிறார்.

**வேம்பு**

1973-74ஆம் ஆண்டு கொ-ஹோடேக் என்ற வால் நட்சத்திரம் பூமிக்கு அருகில் வந்தது.

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த நிக்ஸன் வாட்டர்கேட் ஊழலில் சிக்கிப் பதவி இழந்தார்.

ஸ்பெயின் பிரதமர் லூயிஸ் காரெரோ் பிளாங்கோ படுகொலை செய்யப்பட்டார்.

மெக்சிகோவிலும், பாகிஸ்தானிலும் பூகம்பம் ஏற்பட்டு 5500 பேர் மாண்டனர்.

ஆப்ரிக்காவிலும், இந்தியாவிலும் வறட்சியால் சுமார் இரண்டு லட்சம் பேர் உயிர் இழந்தனர்.

கி.பி. 1347-48இல் இரண்டு வால் நட்சத்திரங்கள் தெரிந்தன. அப்போது உலகில் 250 இலட்சம் பேர் உயிர் இழந்தனர். ஏராளமானோர் தற்கொலை செய்து கொண்டனர்.

1985ஐப் போலவே 1910இல் ஹாலி வால் நட்சத்திரம் தோன்றிய சமயத்தில் ஆயிரக்கணக்கானோர் தற்கொலை செய்து கொண்டனர். மனோதத்துவ அறிஞர் சிக்மண்ட ஃபிராய்டு வியன்னா மாநாட்டில் தற்கொலை பற்றிச் சிறப்புரையே ஆற்ற வேண்டியிருந்தது. அப்போது அவர் குறிப்பிட்டார்.

“வால் நட்சத்திரம் - இயற்கைச் சீற்றம் - தற்கொலை இவற்றுக்குள் ஏதோ ஒரு தொடர்பு இருக்கிறது” என்றார்.

லோரன் கோல்மேன் என்ற அமெரிக்க நிபுணர் “சதர்ன் மெய்ன்” என்ற பல்கலைக் கழகத்தில் தற்கொலை இயல் பிரிவில் தற்கொலைத் தடுப்புத் திட்ட இயக்குநராகப் பணிபுரிகின்றார். அவரது ஆய்வுக் கட்டுரையில் மேற்கண்ட சான்றுகளைக் கொண்டு வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஓம் சக்தி!



# திருமதி அம்மா பதில்கள்

- திருமதி இலட்சுமி பங்காரு அடிகளார்

*அம்மா! நாங்கள் 16 வருடங்களாக அம்மாவை வணங்குகிறோம். நான், தொண்டுதான் என் உயிர்மூச்சு என்று நினைக்கிறேன். ஆனால் என் தந்தை தொண்டு செய்வதற்கு அனுமதி கொடுக்க மறுக்கிறார். நான் என்ன செய்வது என்று அறிவுறுத்துங்கள் அம்மா?*

ஆன்மிகத்தில் ஈடுபட்டு, தொண்டு செய்ய நினைப்பது நல்ல காரியம்தான். அதை ஏன் உங்கள் தந்தையார் தடுக்கிறார் என்பது தெரியவில்லை. சினிமா, போதை, குடி என்று இளைஞர்கள் திசைமாறித் திரியும் வாய்ப்பு அதிகம் உள்ள இந்தக் காலத்தில் தொண்டு செய்வது என்பது தவறான காரியம் அல்ல. இளைஞர்கள் வீட்டையும், வேலையையும் கவனிக்க வேண்டும். குடும்பப் பொறுப்பு இல்லாமல் சில இளைஞர்கள் சதா கோயில், தொண்டு என்றும் இருக்கக் கூடாது. விழா நாட்களிலும், ஓய்வு கிடைக்கும் போதும் தொண்டு செய்யலாம். உங்களின் குடும்பச் சூழ்நிலை என்ன என்பது தெரியவில்லை. இருந்தாலும் உங்கள் தந்தையைச் சமாதானப்படுத்தி, அவருடைய எண்ணங்களுக்கு முதலிடம் கொடுத்து, அம்மாவைப் பற்றியும், தொண்டு செய்வதின் நோக்கத்தையும் எடுத்துச் சொல்லுங்கள். கட்டாயம், உங்கள் தொண்டு செய்யும் நோக்கம் தூய்மையானதாக இருந்தால் அம்மாவின் அருள் கிடைக்கும், உங்கள் தந்தையின் அனுமதியும் கிடைக்கும்.

*இறந்தவர்களைத் தெய்வமாக வணங்கலாமா அம்மா..?*

இதற்கு எத்தனையோ முறை பதில் எழுதிவிட்டேன். எப்படி அம்மாவின் படத்தில் அம்மா இருப்பதாக நம்புகிறோமோ! அதுபோல நம் முன்னோரின் படத்திலும் அவர்கள் இருந்து ஆசிர்வதிப்பதாக நம்பி வழிபாடு செய்வதில் தவறு இல்லை. தாராளமாகத் தெய்வமாக வணங்கலாம். அவர்களைவிட நமக்கு நல்லாசி புரிந்து வாழ்த்தும் ஆன்மா வேறு இல்லை.

□□□

## ஆன்மாவை ஏமாற்ற முடியாது

**“வேஷம் போடும்போது ஒரு பேச்சு! இயல்பாக இருக்கும் போது ஒரு பேச்சு, வீட்டில் இயல்பாகப் பேசும்போது ஒரு பேச்சு. பாறையை மாற்றலாம், பாதையை மாற்றலாம். தோற்றத்தை மறைக்கலாம். ஆனால் ஆன்மாவை மாற்ற முடியாது. ஏமாற்றவும் முடியாது.”**

## ஆன்மா ஒன்றுதான்

**“ஆன்மாக்கள் அனைத்தும் ஒன்றுதான்! ஆனால் அது தனித்தனியாகச் செயல்படும் போதுதான் துன்பங்கள் ஏற்படுகின்றன. ஆன்மாக்களை ஒன்று சேர்ப்பது இந்த இடம் (மேல்மருவத்தூர்) தான்.**

**இந்த ஆலயம் என்னுடையது! நம்முடையது என்று எண்ணிச் செயல்பட வேண்டும்.”**

அன்னையின் அருள்வாக்கு

## அருள்வாக்கும் அனுபவங்களும்:

# ஜோதியைக் கண்டதால் மறுபிறவியில்லை

செங்கற்பட்டை அடுத்த ஊர் ஆத்தூர். அவ்வூரில் அன்னைக்குத் தொண்டு செய்து வந்த தம்பதியர் சக்தி. இரமணேசுவரன், சக்தி.சரோஜா. 1978ஆம் ஆண்டு அன்னையின் ஆலயத்தில் ஆடிப்பூர விழா சிறப்பாக நடைபெற்றது. சக்தி.இரமணேசுவரனும், சக்தி.சரோஜாவும் விழாவிற்கு வந்திருந்தனர். விழாவன்று இரவு நாடகம் நடந்துகொண்டிருந்தது. அந்த நாடகம் நடந்த இடத்திற்கு அருகே ஒரு வேப்பமரம் இருந்தது. அந்த மரத்திலிருந்து ஒரு ஜோதி வெளிப்பட்டு மீண்டும் அந்த மரத்திலேயே மறைந்தது. இந்த ஜோதிக்காட்சி சக்தி சரோஜாவுக்கு மட்டுமே தெரிந்தது.

சக்தி சரோஜா அதுபற்றி அன்னையிடம் அருள்வாக்கில் விளக்கம் கேட்டார்.

“நான்தான் ஜோதி கொடுத்தேன். அந்த ஜோதியை நீ கண்டதனால் உனக்கு மறுபிறவியில்லை” என்றாள் அன்னை.

### சிறுமி வடிவில் காட்சி

சக்தி சரோஜா ஒரு நாள் வீட்டில் அமர்ந்து உறங்கிக்கொண்டிருந்தபோது, கலகல என்ற சிரிப்பொலி கேட்டது. உடனே எழுந்து உட்கார்ந்தார். அப்போது…அங்கே… 10 வயது மதிக்கத்தக்க ஒரு சிறுமி, இவரை நோக்கிச் சிரித்துவிட்டு மறைந்தாள். இரண்டு மூன்று நாள் கழித்து, அருள்வாக்கில் விளக்கம் கேட்டபோது, “அன்று சிறுமியாய் நான்தான் உனக்குக் காட்சி கொடுத்தேன்” என்றாள் அன்னை.

### டைபாய்டு நோயில் விழுந்த கணவர்

சக்தி இரமணேசுவரன் ஒருமுறை காய்ச்சல் கண்டு படுத்த படுக்கையானார். என்ன வைத்தியம் செய்தும் குணமாகவில்லை. அன்னையிடம் அருள்வாக்குக் கேட்கச் சென்றார் சக்தி சரோஜா.

“அவனை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை கொடு! துணையிருந்து காப்பாற்றித் தருகிறேன்” என்றாள் அன்னை.

அவ்வாறே செங்கற்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கே பணியாற்றிய டாக்டர் செல்வராஜ், அன்னையின் பக்தர். எனவே, தனிக்கவனம் எடுத்துச் சிகிச்சை அளித்தார். பல பரிசோதனைகளுக்குப் பிறகு “உங்கள் கணவருக்கு டைபாய்டு, நிமோனியா காய்ச்சல் வந்திருக்கிறது. இது குணமாவதற்கு 21 நாட்களுக்கு மேலாகும். கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்” எனக்கூறி மருந்து மாத்திரைகள் தந்தார்.

அவருக்கு வீட்டில் வைத்துச் சிகிச்சை அளிக்கப்பட்டது. மறுநாள் காய்ச்சலின் வேகம் அதிகமாகி அவதிப்பட்டுக் கொண்டிருந்தார் இரமணேசுவரன். தன் கணவரின் நிலை கண்டு, மனம் பொறுக்காமல், கண்ணீரோடும், வேதனையோடும், அவரது கால் மாட்டில் அமர்ந்தபடி அவரது காலைப் பிடித்து அழுத்திக் கொண்டிருந்தார் சக்தி சரோஜா.

அண்டசராசரம் அனைத்தையும் இருந்த இடத்திலிருந்தே சாட்டையில்லாப் பம்பரம் போல் ஆட்டுவிக்கும் எம்பிராட்டி, அன்னை ஆதிபராசக்தி, அந்த ஓட்டு வீட்டைத் தேடி வந்தாள்..! எப்படி..?

கால் சலங்கை ஒலிக்க, வாசற்படியில் தொங்கிக் கொண்டிருந்த திரைச்சீலையைத் தள்ளிக் கொண்டு நம் தாய், பெண்களை உயர்ந்த வந்த அவதாரத் தெய்வம் அல்லவா?

எந்தத் தவமும், யோகமும், தியானமும் பயிலாமல் தொண்டு என்ற ஒன்றை மட்டும் செய்து வந்த காரணத்தால் தேவி ஆதிபராசக்தி தொண்டன் காய்ச்சல் தீர்க்கவும், அவன் மனைவியின் வேதனைக் குமுறலைத் தணித்து அவளைச் சந்தோஷக் கடலில் மிதக்கச் செய்யவும் தானே வீடு தேடிப் போனாள்.

போனவள் இரமணேசுவரன் கட்டில் அருகே வந்து நின்றாள்.

இவ்வளவையும் கண்ணெதிரே பார்த்துக் கொண்டிருக்கிற மனைவி, எந்தச் சலனமும் அற்ற நிலையில் எழுந்திருக்கவோ, அம்மா என்று கூக்குரல் இடவோ முடியாதபடிக் கட்டிப்போட்டது போல அந்தக் கட்டிலிலே உட்கார்ந்தபடி இருக்கிறார். அன்னை உள்ளே நுழைகிறாள்.

சக்தி சரோஜா மெய்மறந்து பார்க்கிறார்.

(தொடர்ச்சி..7ஆம் பக்கம்)

# ஜோதியைக் கண்டதால்..

(6ஆம் பக்க தொடர்ச்சி)

ஒயிலாக வருகிற அந்த அழகு.. கால் விரல்களில் மெட்டி, தலையில் சடையுடன் கூடிய அடர்ந்த கூந்தல்.. மஞ்சள் பூசிய அழகுத் திருமுகம். நெற்றியில் அகலமான குங்குமத் திலகம். இடப்பக்கம் பிரகாசிக்கிற சிவப்புக்கல் மூக்குத்தி, சிவப்பு ரவிக்கை. பச்சைக்கரை போட்ட சிவப்புச் சேலை. அந்தச் சேலையைத் தார்பாய்ச்சிக் கட்டியிருந்த நேர்த்தி!

அம்பிகையின் அழகுக்கோலத்தை மனக்கண்ணில் கொண்டுவந்து நிறுத்தி, அந்தக் கொள்ளை அழகை – தெய்வீக அழகை சௌந்தர்ய லகரியாகப் பாடினார் ஆதிசங்கரர்.

அன்று காட்சி கொடுத்து மறைந்தாள் எம்பெருமாட்டி!

அவள் வந்து மறைந்த பிறகு கணவர் உடம்பெல்லாம் வியர்வை! மறுநாள் காய்ச்சல் குறைந்தே போயிற்று. அதற்கடுத்த நாள் காய்ச்சல் மறைந்தே போயிற்று.

21 நாள் கழிந்த பிறகுதான் இந்த டைபாய்டு குணமாகும் என்பது டாக்டர்கள் வைத்த கெடு! அதற்கு முன்னாலே வீடு தேடி வந்து காட்சி கொடுத்து, கட்டிலருகே வந்து நின்ற எம்பிராட்டி, தன் மூன்று விரல்களால், இரமணேசுவரன் நெற்றியிலிருந்து கால் விரல்கள் வரை மந்திரிக்கிறாள்.

இவ்வளவையும் பார்த்தபடி இருக்கிறார் மனைவி.

நெற்றியிலே அன்னை கை வைக்கிறபோதே அவள் வெறுங்கையிலிருந்து திருநீறு கொட்டுகிறது. அதுவும் தெரிகிறது.

கணவரின் கால்களைப் பார்த்துவிட்டு, அவர் மனைவி சற்றே தலையைத் திருப்புவதற்குள்... அந்த ஒரு நொடியில் அன்னை மறைந்துவிட்டாள். ஆம்..! மறைந்தே போய்விட்டாள்.

**கனவில் அதர்வண பத்ரகாளி**

இன்னொரு நாள் உறக்கத்தில் ஒரு கனவு! ஆத்தூர் வார வழிபாட்டு மன்றம் தெரிகிறது. அதிலே அன்னையின் படம். அந்தப் படத்தின் பக்கத்தில் அதர்வண பத்ரகாளி தலையை வைத்துப் படுத்தபடி இருக்கிறாள்.

அருகே நின்றபடி இருக்கும் சக்தி சரோஜாவை நோக்கி “எனக்கு கட்டி வெல்லம் கொடு!” என்று கேட்கிறாள். பெரிய கட்டி வெல்லம் கொண்டு வந்து கொடுக்கிறார் இவர். வாயிலே போட்டுக்கொண்டு மறைகிறாள் அதர்வண பத்ரகாளி!

ஏன் இந்தக் கனவு? எதற்காக இந்தக்கனவு? கட்டி வெல்லம் கேட்டதன் தாத்பரியம் என்ன? என்று புரியாமல் குழம்பிய சரோஜா, மருவத்தூர் வந்து அன்னையிடம் அருள்வாக்கு கேட்டார்.

அன்னை சொன்னாள்: “மகளே! அவள் இதுவரை யாரிடமும் சென்றதும் கிடையாது, கேட்டதும் கிடையாது. அவள் உன்னிடம் விரும்பி வந்தது நீ முன் செய்த பூஜாபலன். அவளால் உனக்கு எதிர்காலத்தில் நன்மை கிடைக்கும்” என்றாள்.

அது மட்டுந்தானா..? கனவிலும் வருவாள், நனவிலும் வருவாள் ஆதிபராசக்தி! என்ற பாடல் பொய்யல்ல. கனவிலும் வந்து சக்தி சரோஜாவிற்கு அருள் பாலித்திருக்கிறாள் அன்னை. அதுவும் எப்படி?

ஒருநாள் உறக்கத்தில் ஒரு கனவு. சக்தி. சரோஜா ஆத்தூர் மன்றத்திலே நிற்கிறார். அங்கே அடிகளார் வருகிறார். கையில் ஒரு பெரிய கற்பூரக்கட்டி. அதை ஏற்றி அம்மாவின் படத்திற்கு ஆராதனை செய்கிறார். அடுத்தகனம் படத்தில் “ஓம்” என்ற பிரணவ மந்திரம் பளிச்சென ஒளியுடன் தெரிகிறது.

ஆத்தூர் மன்றத்தார் தம் மன்றத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவை ஒட்டிச் சிறப்பு மலர் ஒன்றை வெளியிட்டார்கள்.

“நான் கண்ட சக்தி!” என்ற தலைப்பில் உன் அனுபவங்களை எழுது!” என்று அன்னை ஆணையிட்டதால் அம்மலரில் தன் அனுபவங்களை எழுதியிருந்தார் சக்தி சரோஜா. அவையே மேற்கூறப்பட்டவை.

# நான் கண்ட அம்மா

அம்மாவின் அருட்பார்வை எனக்கு 1991ஆம் ஆண்டில் - அதாவது 39ஆவது வயதில் கிடைத்தது. ஆதிபராசக்தி வேறு, அடிகளார் வேறு என்று இதுவரை பிரித்துப் பார்க்க முடியவில்லை.

எங்கள் பகுதியில் முதன் முதலில் கமலீஸ்வரன் கோயிலில்தான் ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம் அமைத்திருந்தனர். அதில்தான் நான் உறுப்பினராக இருந்தேன். வாரம் ஒரு நாள் வெள்ளிக்கிழமை வழிபாடு. மாலை 4.30 மணியிலிருந்து 6.00 மணி வரை பூஜை நடைபெறும். அந்த மன்றம் சிதம்பரத்தில் இருப்பது. நான் அண்ணாமலை நகரிலிருந்து மன்றத்துக்குச் சென்று வழிபாடெல்லாம் முடிந்து வீட்டுக்குச் செல்ல இரவு 7.00 அல்லது 8.00 மணியாகிவிடும். இவ்வாறு மூன்று வருடங்கள் வழிபட்டு வந்தேன்.

## மன்றம் வை! என்று ஒரு குரல்

ஒருநாள் இரவு நான் உறங்கிக்கொண்டிருந்தபோது, “மன்றம் வை! மன்றம் வை!” என்று ஒரு குரல் என்னை எழுப்பியது. கண் விழித்துப் பார்த்தேன். யாரும் இல்லை! எங்கிருந்து இந்தக்குரல்..? என்று ஒன்றுமே புரியவில்லை.

செவ்வாய், வெள்ளி, அமாவாசை, பௌர்ணமி ஆகிய நாட்களில் நான் பாயில் படுக்க மாட்டேன். வெறும் தரையில்தான் படுத்து உறங்குவேன்.

**சக்தி சண்முகசுந்தரி,**
அண்ணாமலைநகர் - சிதம்பரம்.

அடிக்கடி அந்தக்குரல் மன்றம் வை! என்று கூறக் கேட்டு, எழுந்து உட்காருவேன். என்ன! ஏன் விழித்திருக்கிறாய்? என்று என் கணவர் விசாரிப்பார்.

என்னவோ தெரியவில்லை… கீழே தலைவைத்துப் படுத்தால் மன்றம் வை! மன்றம் வை! என்று குரல் கேட்கிறது. தாங்க முடியவில்லை என்பேன்.

## முதன்முதல் அண்ணாமலை நகரில் மன்றம்

ஒருநாள் உறக்கத்தின் போது ஒரு கனவு..

புவனகிரி வேள்விக்குழு பொறுப்பில் உள்ளவர் சக்தி மனோகரி. அவர் வேள்விக்கலசம் ஒன்றை ஏந்தியபடி எங்கள் வீட்டுக் கதவு வழியாக வருகிறார். வீட்டுக்கதவுகள் இரண்டும் தங்க நிறத்தில் ஜொலிக்கின்றன. உடனே கண் விழித்துக் கொண்டேன்.

என் கணவரிடம் கனவில் கண்ட காட்சி பற்றிக் கூறினேன். ஒன்றும் புரியவில்லை! என்ன நடக்குது என்று பார்க்கலாம் என்று கூறினார்.

(தொடர்ச்சி..9ஆம் பக்கம்)

## அமாவாசை – பௌர்ணமி விளக்குப்பூசை பலன்கள்

**ஆவணி – அமாவாசை–பௌர்ணமி :**

புத்திரப்பேறு உண்டாகும்..
குழந்தைப்பேறு இல்லாத குறைநீங்கி
நல்ல மக்களைப் பெறும் அதிர்ஷ்டம் உண்டாகும்.

**புரட்டாசி – அமாவாசை–பௌர்ணமி :**

பசுக்கள் விருத்தி உண்டாகும்.
கால்நடைச் செல்வம் பெருகி நிறைந்த பால் வளப்பெருக்கம் உண்டாகும்.

# Sydney - Mandrams - Upcoming Events – September 2018



**Melmaruvathur Swayambu Arulmihu Annai Athiparasakthi Sitherpeedam NSW Mandram (Australia)**
Contact: 02-96420519, 0439686452

**Every Friday : 7.30p.m. – 9.30p.m.**
Westmead Public Primary School
Moree Street – Westmead



| | | | |
|---|---|---|---|
| 07.09.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 14.09.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 21.09.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 24.09.2018 | MONDAY – திங்கள் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja<br>பௌர்ணமி விளக்குப் பூஜை |
| 28.09.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## நான் கண்ட அம்மா....

(8ஆம் பக்க தொடர்ச்சி..)

அண்ணாமலை நகரில் ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம் அமைக்க வேண்டும் என்பது அம்மாவின் திருவுள்ளம் போலும்! எனக்கருதி ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்தோம். அப்போது அண்ணாமலை நகரிலிருந்து சிதம்பரம் சென்று வழிபட்டு வருபவர்கள் இருவர், அதில் நான் ஒருத்தி.

சித்தர்பீடத்தில் அம்மா படம் வாங்கி விட்டேன். பிரேம் போட்டு விட்டேன். இடம் தேர்ந்து எடுத்தாயிற்று. மன்றம் தொடங்க வேண்டுமானால் குறைந்தது 25 பேராவது வேண்டாமா..? இங்கே யாரும் அம்மாவைக் கும்பிடுவதில்லை.. அப்படி இருக்க எப்படி மன்றம் தொடங்குவது? என்ற தயக்கம் வந்தது. எனவே வீட்டிலேயே படத்தை வைத்துக் கொண்டிருந்தேன்.

### சுப்ரமணியன் கண்ட கனவு

சிதம்பரம் ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றத் தலைவர் சக்தி.சுப்பிரமணியன். அவரது உறக்கத்தில் ஒரு கனவு.

சுமார் 10 வயதுள்ள சிறுமி தாத்தா! தாத்தா! என்னை இங்கேயே வைத்து விட்டீர்களே! என்னை மன்றத்துக்கு அழைத்துச் செல்லுங்கள் என்று கூறுகிறாள்.

மன்றம் இருக்குமிடம்தான் உனக்குத் தெரியுமே.. நீ போக வேண்டியதுதானே..? என்று கூறி அப்பெண்ணை அழைத்துக்கொண்டு நாங்கள் தேர்ந்தெடுத்த மன்றத்திற்கு அருகில் அவர் வருகிறார். அந்தச் சிறுமி விடுவிடுடென்று மன்றத்திற்குள் நுழைகிறாள்.

தனது சைக்கிளை வெளியில் நிறுத்திவிட்டு சுப்பிரமணியம் மன்றத்தின் உள்ளே வந்து பார்க்கிறார். உடன் வந்த சிறுமியைக் காணோம். அங்கே நான் மந்திரம் படித்துக் கொண்டிருக்கிறேன்.

இப்படி ஒரு கனவுக் காட்சி சுப்பிரமணியத்துக்குக் கிடைத்தது.

மறுநாள் சுப்பிரமணியம் என்னைத் தேடிக்கொண்டு வந்து விட்டார். கனவு விபரம் சொன்னார். "நான் எங்கள் பகுதியில் மன்றம் தொடங்க இருக்கிறேன். ஆனால் யாருமே இங்கு ஆதிபராசக்தியைக் கும்பிடவில்லையே..எப்படித் தொடங்குவது என்று தெரியவில்லை. படத்தை வாங்கிக் கொண்டு வந்து வைத்துக் கொண்டு புரியாமல் தவிக்கிறேன்" என்று என் நிலைமையைச் சொன்னேன்.

(தொடர்ச்சி..10ஆம் பக்கம்)

# நான் கண்ட அம்மா....

(9ஆம் பக்க தொடர்ச்சி..)

“முதலில் படத்தை எடுத்துக்கொண்டு வந்து அந்த இடத்தில் வையுங்கள். மன்றத்தை அம்மா வளர்த்துக் கொள்வாள்” என்றார். அவ்வாறே படத்தை எடுத்து வந்து மன்றத்தில் நிறுவினோம்.

இப்படித்தான் எங்கள் அண்ணாமலை நகரில் மன்றம் தொடங்கப்பட்டது. அன்று தொடங்கி அம்மாவின் சித்தாடல் இன்று வரை தொடர்கிறது.

எங்கள் மன்றத்தில் அம்மா நடத்திய சித்தாடல்களில் சில...

## கனவில் சென்று நோய் தீர்ந்தது

எங்கள் மன்றத்துப் பெண்மணி ஒருவர். அவர் கணவருக்கு நோய் முற்றி ஆபத்தான நிலை. உறவினர்கள் அனைவரும் வந்துவிட்டனர். இனி இவர் பிழைக்கமாட்டார் என டாக்டர்கள் கூறிவிட்டனர். மன்றத் தொண்டர் ஒருவர், அப்பெண்மணியின் கணவர் நலம்பெற வேண்டி அவருக்குத் திருஷ்டி கழித்தார். குங்குமம், கொடுத்துவிட்டு வந்தார்.

அன்று இரவே அம்மா ஒரு சிறுமியாக அங்குச் சென்று வெற்றிலையில் மருந்து வைத்துக் கொடுத்து “உள்ளுக்குச் சாப்பிடு! இனி கட்டிலில் படுக்காதே! பாயில் படு!” எனச் சொல்லிவிட்டு மறைந்து விட்டார்கள். அன்று இரவே அவர் நலம் பெற்று எழுந்து விட்டார். உறவினர்களுக்கெல்லாம் இது அதிசயமாகிவிட்டது.

## மூளைக்காய்ச்சலால் வாடிய ஒரு பெண்மணி

இன்னொரு அன்பர். அவர் சகோதரிக்கு மூளைக்காய்சல். ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். இவர் மூளையில் இரத்தம் கட்டிவிட்டது. இனி இவர் பிழைப்பதற்கு வழியில்லை. பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று பாருங்கள்!” என்று டாக்டர்களே சொல்லிவிட்டனர்.

அந்தப் பெண்மணியின் சகோதரன் எங்கள் மன்றத்துக்கு ஓடி வந்தார். ‘எங்கள் தங்கையை வந்து பாருங்கள். இனி பிழைக்க மாட்டாள் என்று டாக்டர்களே சொல்லிவிட்டார்கள்!’ எனச் சொல்லி அழுதார்.

நான் அம்மா படத்தின் முன் நின்றபடி, ‘அம்மா தாயே! அவளை எப்படியாவது பிழைக்கச் செய்!’ என வேண்டிக்கொண்டு, எலுமிச்சம்பழம், வேப்பிலை, குங்குமம் எடுத்துக் கொண்டு அந்தப் பெண்ணைப் பார்க்கப் போனேன்.

(தொடர்ச்சி..11 ஆம் பக்கம்)

புதிய பரிணாம வளர்ச்சியில் ஆதிபராசக்தி இணையத்தளம்



ஆன்மிக விடைதேடும்
அதிக பக்தர்களின் மனதைக்கவர்ந்த
ஆதிபராசக்தி இணையத்தளம்
www.adhiparasakthi.co.uk

“ஜோதி” ஆன்மிகச் செய்திச் சுடரை
www.adhiparasakthi.co.uk என்ற

இணையத்தளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்து வாசித்து பயன்பெறலாம்.

ஜோதி ஆன்மிகச் செய்திச்சுடர்

# நான் கண்ட அம்மா....

(10ஆம் பக்க தொடர்ச்சி..)

அவள் கண்கள் செருகியிருந்தன. கை, கால்கள் மரத்துப் போயிருந்தன. என்னடா இது! இவள் பிழைப்பாளோ மாட்டாளோ! எலுமிச்சம்பழம் எல்லாம் தயார் செய்துகொண்டு வந்து விட்டோமே.. என மனம் தயங்கினேன்.

சரி! எது நடந்தாலும் அம்மா பார்த்துப்பா! என அம்மா மேல் பாரத்தைப் போட்டு விட்டு அவளுக்கு எலுமிச்சம் பழம் பிழிந்து திருஷ்டி சுற்றி நான்கு பக்கமும் பிரித்துப் போட்டேன். கலசத் தீர்த்தத்தை வாயில் ஊட்டி விட்டேன். திரும்பி வந்துவிட்டேன்.

நான் திருஷ்டி கழித்துவிட்டு வந்த பிறகு அந்த ஆஸ்பத்திரியில் என்ன நடந்தது தெரியுமா…? அந்தக் காட்சியை நேரில் கண்டவர் அந்தப் பெண்ணின் கட்டிலுக்கு எதிரே இருந்த ஒரு நோயாளி. அவர் சொன்னார்.

‘அந்தப் பெண்ணின் கட்டில் அருகே நான்கு உருவங்கள்! வெள்ளை வெளேர் என்று தோற்றம்! இந்தப் பெண்ணா? என்று ஒரு உருவம் கேட்கிறது. சேச்சே! இவள் இல்லை வா! என்று கூறியபடி நகர்கிறது. அடுத்த ஒரு இடத்தில் அதே நேரத்தில் ஒருவர் இறந்து போனார்.

அந்தப் பெண்ணைப் பாண்டிச்சேரி ஜிப்பர் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள்.

தினமும் எலுமிச்சம்பழம் திருஷ்டி கழிக்கச் சொல்லி அனுப்பினோம். அவ்வாறே செய்தார்கள். டாக்டர்களே ஆச்சரியப்படத்தக்க வகையில் அந்தப் பெண் பிழைத்துக் கொண்டாள்.

திருஷ்டியில் இவ்வளவு சக்தியை அம்மா வைத்திருக்கிறாளே..! என்று வியந்தோம்.

### குடிகாரக் கணவன்

மருத்துவம் செய்யும் குலத்தைச் சேர்ந்த பெண் ஒருத்தி. அவள் கணவனோ குடிகாரன். தினமும் குடித்துக் குடித்துக் குடலெல்லாம் வெந்து, புண்ணாகி, ரத்த வாந்தி எடுக்கும் நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். இவர் பிழைப்பது கஷ்டம் என்று டாக்டர்கள் சொல்லிவிட்டனர்.

அந்தப் பெண் எங்கள் மன்றத்துக்குக் கண்ணீரும் கம்பலையுமாக ஓடி வந்தாள்.

அம்மா! என் கணவரைக் காப்பாற்ற வழி செய்யுங்கள். எனக்கு மடிப்பிச்சை கிடைக்க வழி சொல்லுங்கள்! என்று கதறி என் முன் மண்டியிட்டு அழுதாள்.

எனக்கு என்ன செய்வது? சொல்வது? என்றே தெரியவில்லை.

அம்மாவை நினைத்து, அம்மா! தாயே! இந்தப்பெண் இங்கிருக்கும் டாக்டர்களை நம்பாமல், உனது பொற்பாதங்களே கதி என்று வந்து அழுகிறாள். இவள் கணவனைக் காப்பாற்றுவது உன் பொறுப்பு! எனத் தியானித்து ஒரு எலுமிச்சம் பழமும், வேப்பிலையும், கலச தீர்த்தமும், அர்ச்சனை பண்ணிய குங்குமமும் கொடுத்து அனுப்பினோம்.

நான் சொல்லியபடி அவள் கணவனுக்குத் தீர்த்தம் கொடுத்தாள். வேப்பிலையால் வயிற்றுப்பகுதியில் தடவிவிட்டாள். குங்குமம் பூசினாள். எலுமிச்சம் பழம் பிழிந்து திருஷ்டி கழித்தாள்.

அன்று இரவு அம்மா என்ன செய்தாள் தெரியுமா..?

அந்தக் குடிகாரன் கனவில் அம்மா சென்று வயிற்றைக் கிழித்து, உள்ளே இருந்த அழுகிய குடல் பகுதிகளை எடுத்து எறிந்திருக்கிறாள். மாவுக் கட்டு போட்டிருக்கிறாள். எல்லாமே கனவில்தான்.

மறுநாள் காலை அந்த ஆள் பிழைத்துக் கொண்டார்.

அன்று முதல் இன்று வரை நலமாக இருக்கிறார்.

### சக்தி மாலையின் மகிமை


ஒரு நாள் எங்கள் மன்றத்தின் பின்புறம் வசிக்கும் ஒரு பெண்ணின் உடல்நிலை மிகவும் மோசமாகிவிட்டது. அவரை தஞ்சாவூருக்கு எடுத்துச் செல்வதற்கு முன்பாக மன்றத்துக்கு வந்தனர். அம்மாவை வேண்டிக்கொண்டு, அந்தப் பெண்ணின் கழுத்தில் சக்திமாலை அணிவித்து, எலுமிச்சம்பழமும் கொடுத்து அனுப்பி வைத்தோம்.

(தொடர்ச்சி..12 ஆம் பக்கம்)

# Sydney - Mandrams - Upcoming Events – September 2018



## மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர்
**Melmaruvathur Athiparasakthi Sithar Peeta Sydney Centre**



Contact: 02-97643872, 0416217317

**Weekly Prayers - Every Friday: 7.30p.m. – 9.00p.m.**

Homebush High School (Gymnastic Hall)
Bridge Road, Homebush 2140

| | | | |
|---|---|---|---|
| 07.09.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 14.09.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 21.09.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 28.09.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | Vilakku Pooja<br>விளக்குப் பூஜை |

## நான் கண்ட அம்மா....
(11ஆம் பக்க தொடர்ச்சி..)

நடு வழியில் அந்தப் பெண்ணுக்கு மூச்சு அடைத்தது. அவர் மகளும் மாப்பிள்ளையும் தாயே! காப்பாற்று! காலமெல்லாம் உனக்கு என் குடும்பம் அடிமை என்று வேண்டியிருக்கிறார். அம்மா கருணையால் பிழைத்துக் கொண்டார்.

அந்தப் பெண்ணின் வீட்டில் அம்மா சில சித்தாடல்கள் நடத்தினாள். அவர் வீட்டில் வைத்து பூஜை செய்த அம்மா படத்திலிருந்து குங்குமம், மஞ்சள் கொட்டியபடி இருந்தது. இச்செய்தி அப்போது பத்திரிகைகள் சிலவற்றிலும் வெளிவந்தது.

அது குறித்து அம்மாவுக்குப் பாதபூஜை செய்து கேட்டோம். அந்தப் பெண்மணியின் பூர்வ ஜென்ம புண்ணியத்தால் குங்குமமும், மஞ்சளும் கொட்டுகிறேன் என்று அம்மா கூறினார்கள்.

### என் மகளை விபத்திலிருந்து காப்பாற்றியது

ஒருமுறை என் மகனும், மருமகளும், பேரனும் காரைக்காலிலிருந்து அண்ணாமலை நகருக்கு ஸ்கூட்டரில் வந்துகொண்டிருந்தனர். அப்போது ஒரு காரில் மோதி மூவரும் தூக்கி எறியப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நடக்கும் அதே நேரத்தில் மருவத்தூரில் அம்மா முக்கியஸ்தர் ஒருவரிடம் பேசிக் கொண்டிருந்தார்களாம். திடீரென்று ஏதோ ஒரு பொருளைத் தாங்கி இறக்கி வைப்பதுபோல சைகை செய்திருக்கிறார்கள்.

அந்தச்சாலை எப்போதும் போக்குவரத்து நிரம்பியது. அந்த விபத்தில் என் பேரனுக்கும், மருமகளுக்கும் அடி எதுவும் இல்லை. என் மகளுக்கு மட்டும் சிராய்ப்பு. ஆனாலும் கால் அறுந்தால் எவ்வளவு வேதனை இருக்குமோ, அவ்வளவு வேதனையும் பட்டுவிட்டான்.

உயிராபத்திலிருந்து காப்பாற்றிவிட்டாள். ஆயினும் வேதனையை அனுபவிக்க வைத்து வினையைக் கழித்தாள்.

### உதிரப் போக்கால் அவதிப்பட்ட ஒரு பெண்மணி

இன்னொரு பெண்மணி! அவர் பெயர், ஊர் எதுவும் தெரியாது. தற்செயலாக அண்ணாமலை நகர் மருத்துவமனையில் சந்தித்தேன்.

அவருக்கு ஒரு தீராத பிரச்சனை. மூன்று வருடங்களாக ஒரு நாள் கூட நிற்காமல் உதிரப்போக்கு தொடர்ந்தபடி இருந்தது.

(தொடர்ச்சி..13ஆம் பக்கம்)

## Melbourne - Mandrams – Upcoming Events – September 2018

**Melmaruvathur Swayambu Arulmihu Athiparasakthi Vaara Valipaattu Mandram**

**மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்**

(Reg. No. 2193)

**விக்டோரியா – அவுஸ்திரேலியா**

P.O.Box: 5217, Clayton, Victoria 3168, Australia - E-mail: melbourne.mandram@gmail.com

Contacts / மன்ற தொடர்புகளுக்கு: 0433440194 - Facebook : : https://www.facebook.com/MM2193

**கூட்டு வழிபாடுகள்:**

**Clarinda – வெள்ளி - Friday:**

**Melaleuca Activity Hub,**
31 Melaleuca Drive
Clarinda 3169
(Mel.Ref.: 78 K 3)

**Dandenong - ஞாயிறு – Sunday:**

**Latham Crescent Centre**
Cnr of Latham Cr. & Deakin Cr.-
Dandenong3175
(Mel.Ref.: 90 C 01)

| | | | | |
|---|---|---|---|---|
| Dandenong - 02.09.2018 | Sunday | ஆவணி | 17 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 07.09.2018 | Friday | ஆவணி | 22 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 09.09.2018 | Sunday | ஆவணி | 24 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 14.09.2018 | Friday | ஆவணி | 29 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 16.09.2018 | Sunday | ஆவணி | 31 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 21.09.2018 | Friday | புரட்டாசி | 05 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 23.09.2018 | Sunday | புரட்டாசி | 07 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 28.09.2018 | Friday | புரட்டாசி | 12 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 30.09.2018 | Sunday | புரட்டாசி | 14 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |

**09.09.2018 – ஞாயிறு - அமாவாசை, 24.09.2018 – திங்கள் - பௌர்ணமி**

## நான் கண்ட அம்மா....

(12ஆம் பக்க தொடர்ச்சி..)

அப்பலோ மருத்துவமனையிலிருந்து, அண்ணாமலைநகர் மருதத்துவமனைக்கு வந்திருந்தனர். படுக்கையை விட்டுக் கீழே இறங்கக் கூடாது என டாக்டர்கள் எச்சரித்து அனுப்பி இருந்தனர்.

என் உறவுக்காரப் பெண் அடுத்த படுக்கையில் அவர் கிடந்தார்.

அவரது பரிதாப நிலையைக் கேள்விப்பட்டு, அவருக்கு அம்மாவின் குங்குமம் வைத்து, மருவத்தூர் சென்று அம்மாவுக்குப் பாதபூஜை செய்து முறையிட்டுக் கொள்ளுமாறு யோசனை சொன்னோம். அதன்படியே அவர்கள் செய்தனர். அம்மா சில மருந்துகள் கூறினார்கள்.

ஒரு நவராத்திரி விழாவின்போது அந்தப் பெண்மணி ஓடி வந்து, என்னைத் தழுவிக்கொண்டு, முத்தம் கொடுத்து, அம்மா அருளால்தான் குணமாகிவிட்டதாகக் கூறி மகிழ்ந்தார்கள்.

இது ஏதோ தெய்வச்செயல்! என்று கூறி டாக்டர்கள் எல்லாம் அதிசயப்பட்டார்களாம்.

இலட்சக்கணக்கில் செலவு செய்தும் தீராத அவரது பிணி, அம்மாவின் குங்கும மகிமையாலும், அவள் சொன்ன மருந்து சாப்பிட்டதாலும் தீர்ந்தது.

அதனைக் கேள்விப்பட்டு நமக்கெல்லாம் எப்பேர்ப்பட்ட தாய் கிடைத்திருக்கிறாள்..! என எண்ணி எண்ணி உளம் பூரித்தேன்.

அவள் பாதங்களை நாம் சிக்கெனப் பிடித்துக்கொள்ள வேண்டும்.

(தொடர்ச்சி..14ஆம் பக்கம்)

## Melbourne - Mandrams – Upcoming Events – September 2018



### Melmaruvathur Aadhiparasakthi Vara Valipaattu Mahalir Mandram

Join Prayers: Every Friday 7.30p.m. – 9.30p.m.

**Vermont South Community House,**
Karobran Drive – Vermont South 3133 - (Mel.Ref.: 62 G 7)



| | | | |
|---|---|---|---|
| 07.09.2018 | FRIDAY - **வெள்ளி** | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 14.09.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 21.09.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 24.09.2018 | MONDAY – திங்கள் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja<br>பௌர்ணமி விளக்குப் பூஜை |
| 28.09.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

**Lalor**

Join Prayers: Once a month - Sunday 4.00p.m. – 6.00p.m.
Yarra Plenty Regional Library Service (Hall adjacent to the library)
May Road - Lalor 3075 (Mel.Ref.: 8 K 6)

## நான் கண்ட அம்மா....

(13ஆம் பக்க தொடர்ச்சி..)

### பங்காருவா? கங்காருவா?

நாங்கள் எங்கள் பகுதியில் மன்றம் அமைத்த புதிதில் ஒரு போக்கிரிப்பையன், என் காதுபட பங்காருவாவது கங்காருவாவது என்று கேலி செய்துவிட்டுச் சென்றான்.

‘என்ன நீங்கள்..? உங்கள் அடிகளாரை அவன் கேலி செய்துவிட்டுப் போகிறான்? சும்மா இருக்கிறீர்களே..!’ என்று அருகிலிருந்த ஒருவர் கேட்டார்.’

அவன் கிண்டலாகச் சொன்னாலும், அதிலும் ஓர் உயர்ந்த உண்மை இருக்கிறது.

மற்ற மிருகங்கள் எல்லாம் குட்டி போட்டதும், தாயிடமிருந்து பிரிந்து விடுகின்றன. ஆனால் கங்காரு மட்டும் தன் குட்டியை வயிற்றில் வைத்துப் பாதுகாக்கிறது. அதுபோல, தன்னை நம்பியவர்களையும், சரண் அடைந்தவர்களையும், நெஞ்சில் வைத்துக் காப்பாற்றுவார்கள் எங்கள் அம்மா!”என்றேன்.

இன்னும் சொல்லப்போனால் இவர்களெல்லாம் அம்மாவின் கணக்கில் அடம் பிடிக்கும் சிறு பிள்ளைகள்…! இவர்களையெல்லாம் அவரவர் விதி வழியே ஆடவிட்டு வேடிக்கை பார்க்கிறாள்!” என்றேன்.

### சொல்லச்சொல்ல இனிக்குதடா..

அந்த நாட்களில் நாங்கள் 64பேர் சக்திமாலை அணிந்து இருமுடி எடுத்துக்கொண்டு 5 நாள் பாதயாத்திரையாக மேல்மருவத்தூர் போவோம். வழியெல்லாம் அம்மாவின் அற்புதங்களையும், சித்தாடல்களையும் பேசிக்கொண்டு நடப்போம்.

அம்மாவின் அற்புதங்களைச் சொல்லிக்கொண்டே போகலாம். சொல்லச் சொல்ல இனிக்குதடா! என்று பாடலாம். இன்னும் நிறைய உள்ளன.. என்னைப் பொறுத்தவரை நம் குருவும், அன்னையும் ஒன்றுதான்.

ஓம் சக்தி!

# Divine Miracles at Melmaruvathur

## I am Omnipresent – You are there and I am within you

Once Mr.S.R.Krishnamurthy was sent to Switzerland along with his colleague Mr.Mookandi. In Switzerland, the checking is very scrupulous. Anyone who goes there is supposed to carry their passports wherever they go.

One day Mr.Krishnamurthy went out with his passport. He always used to keep his passport in the inside pocket of his jerkin. On his return he found that the passport was missing. He was shocked beyond words, searched everywhere. He was too worried about the consequences. He was worried whether he would be able to go back to his country. He told his colleague about it and they decided to inform the police. They once again searched thoroughly.

Suddely Krishnamurthy found a photo of Maruvathur Adigalar and Swayambu on the wall. Krishnamurthy suddenly felt the Mother's grace and prayed intensely and surrendered to her totally. After a shortwhile, he was a little composed. He got up to wear his jerkin again, which he threw down a short while ago. It was a miracle. The passport fell down! They both could not believe their eyes, but it was Mother who brought it back and saved him and brought him back safely to India.

Mother's divine revelations, no doubt can make wonders.

Krishnamurthy recalled, "once I had an opportunity to listen to revelation, but due to some reason I did not take it seriously. Even to such a person Mother has showered her love in abundance…" he cried and narrates the story. He came back to India and straight away he went to Maruvathur. Mother said, "From now on my son, you put on red clothes. You can engage yourself in a lot of community services. My blessings are always there for you".

He said, "Mother you saved me from such trouble in Switzerland. How can I forget that?" Mother smiled and said, "I am Omnipresent. I am the world. You are a part of it. I am within you also. You realize this and you would understand everything".

***

ஆன்மிககுரு

அருள்திரு அடிகளார் அருளிய

# குரு உபதேசங்கள்



**பலரகமான பக்தர்கள்**

"அம்மா எல்லோருக்கும் அருளைக் கொடுக்கிறாள். அதனை அனைவரும் பெற்றுப் பயனடைவதில் வித்தியாசம் இருக்கிறது.
கிடைக்கிற உருளைக் கிழங்கைச் சிலர் கூட்டு வைத்து சாப்பிடுகிறார்கள்.
சிலர் பொரியல் செய்து சாப்பிடுகிறார்கள்.
சிலர் வறுவல் செய்து சாப்பிடுகிறார்கள்.
அதுபோலப் பெற்றுப்பலன் அடைவதில் பல ரகம்."

**நீங்களும் நானும் (தொண்டர்கட்கு)**

நான் உங்களுக்குச் சொத்து!
நீங்கள் எனக்குச் சொத்து நமக்குள் இருக்கும் இந்த அன்பை விலை கொடுத்து வாங்க முடியாது. உங்கள் தொண்டினையும் விலை கொடுத்து வாங்க முடியாது.

# ஆன்மிக நாட்குறிப்பு

(அவுஸ்திரேலிய நேரம்)

| | | | | |
|---|---|---|---|---|
| 02.09.2018 | ஞாயிறு | ஆவணி | 17 | கிருஷ்ண ஜெயந்தி – கோகுலாஷ்டமி – கார்த்திகை விரதம் |
| 06.09.2018 | வியாழன் | ஆவணி | 21 | ஏகாதசி விரதம் |
| 07.09.2018 | வெள்ளி | ஆவணி | 22 | பிரதோஷ விரதம் |
| 08.09.2018 | சனி | ஆவணி | 23 | தேர் - நல்லூர் கந்தசுவாமி கோவில் |
| 09.09.2018 | ஞாயிறு | ஆவணி | 24 | **அமாவாசை விரதம்** |
| 13.09.2018 | வியாழன் | ஆவணி | 28 | **விநாயகர் சதுர்த்தி** |
| 15.09.2018 | சனி | ஆவணி | 30 | ஷஷ்டி விரதம் |
| 22.09.2018 | சனி | புரட்டாசி | 06 | 1ஆம் புரட்டாசி சனி |
| 24.09.2018 | திங்கள் | புரட்டாசி | 08 | **பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி |
| 28.09.2018 | வெள்ளி | புரட்டாசி | 12 | **சங்கடஹர சதுர்த்தி**<br>**திருவிளக்குப் பூஜை**<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர் - சிட்னி |
| 29.09.2018 | சனி | புரட்டாசி | 13 | 2ஆம் புரட்டாசி சனி |
| 05.10.2018 | வெள்ளி | புரட்டாசி | 19 | ஏகாதசி விரதம் |
| 06.10.2018 | சனி | புரட்டாசி | 20 | 3ஆம் புரட்டாசி சனி |
| 08.10.2018 | திங்கள் | புரட்டாசி | 22 | **அமாவாசை விரதம்** |
| 09.10.2018 | செவ்வாய் | புரட்டாசி | 23 | நவராத்திரி ஆரம்பம் |
| 12.10.2018 | வெள்ளி | புரட்டாசி | 26 | சதுர்த்தி விரதம் |
| 13.10.2018 | சனி | புரட்டாசி | 27 | 4ஆம் புரட்டாசி சனி |
| 14.10.2018 | ஞாயிறு | புரட்டாசி | 28 | ஷஷ்டி விரதம் |
| 18.10.2018 | வியாழன் | ஐப்பசி | 01 | சரஸ்வதி பூஜை - ஆயுத பூஜை |
| 19.10.2018 | வெள்ளி | ஐப்பசி | 02 | விஜயதசமி - கேதாரகௌரி விரதாரம்பம் |
| 20.10.2018 | சனி | ஐப்பசி | 03 | ஏகாதசி விரதம் |
| 22.10.2018 | திங்கள் | ஐப்பசி | 05 | பிரதோஷ விரதம் |
| 24.10.2018 | புதன் | ஐப்பசி | 07 | **பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி |
| 26.10.2018 | வெள்ளி | ஐப்பசி | 09 | **திருவிளக்குப் பூஜை**<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர் |
| 06.11.2018 | செவ்வாய் | ஐப்பசி | 20 | தீபாவளி |

குருவடி சரணம்! திருவடி சரணம்!!



*ஓம் சக்தியே! ஆதிபராசக்தியே!*

## ஆதிபராசக்தி சித்தர்பீடம் - மேல்மருவத்தூர்

### ஆலய சிறப்பு விழாக்கள்

### 2018 - ஸ்ரீ விளம்பி வருடம்

| | | | | |
|---|---|---|---|---|
| ஆவணி | 25 | 09.09.2018 | ஞாயிறு | **அமாவாசை - வேள்வி** |
| புரட்டாசி | 08 | 24.09.2018 | திங்கள் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| புரட்டாசி | 22 | 08.10.2018 | திங்கள் | **அமாவாசை - வேள்வி** |
| புரட்டாசி | 23 | 09.10.2018 | செவ்வாய் | **சித்தர் பீடத்தில் நவராத்திரி பெருவிழா ஆரம்பம்** |
| ஐப்பசி | 07 | 24.10.2018 | புதன் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஐப்பசி | 21 | 07.11.2018 | புதன் | **அமாவாசை - வேள்வி** |
| கார்த்திகை | 7 | 23.11.2018 | வெள்ளி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| கார்த்திகை | 20 | 06.12.2018 | வியாழன் | **அமாவாசை - வேள்வி** |
| மார்கழி | 7 | 22.12.2018 | சனி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| மார்கழி | 10 | 25.12.2018 | செவ்வாய் | **கிறிஸ்மஸ்** |